# நடப்பு நிகழ்வுகள் – 2023

## அக்டோபர்

## தமிழ்நாடு

- தமிழக அரசின் சார்பில் தமிழ் இணையக் கல்விக் கழகம் மூலம் வரும் 2024ம் ஆண்டு பிப்ரவரி 8, 9, 10 ஆகிய நாட்களில் சென்னை, நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில், தமிழ்க் கணினி பன்னாட்டு மாநாடு நடைபெறும் என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.
- வேளாண் விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதன் நினைவைப் போற்றும் வகையில் தஞ்சாவூர், ஈச்சங்கோட்டையிலுள்ள வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் இனி 'டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்' என்று பெயர் மாற்றப்பட்டுள்ளது.
    - இயற்பெயர்: மான்கொம்பு சாம்பசிவன் சுவாமிநாதன்
    - பிறந்த இடம் : கும்பகோணம்
    - 1968 இல் பிரதமர் இந்திரா காந்தி அரசால் M.S சுவாமிநாதன் தலைமையில் தொடங்கப்பட்ட பசுமை புரட்சியின் விளைவாக உணவு தானிய உற்பத்தி அதிகரித்தது.
    - அதன் விளைவாக இந்தியா உணவு தானியங்களை ஏற்றுமதி செய்யத் தொடங்கியது. இந்தியா தற்போது உலகில் அரிசி மற்றும் கோதுமை இரண்டிலும் இரண்டாவது பெரிய உற்பத்தியாளராக உள்ளது, அத்துடன் அரிசியின் மிகப்பெரிய ஏற்றுமதியாளராகவும் உள்ளது.
    - இந்திய பசுமை புரட்சியின் தந்தை: M.S. சுவாமிநாதன் பசுமை புரட்சியின் தந்தை : நார்மன் போர்லாக்
- தமிழ்நாடு இணையவழி சூதாட்டத்தை தடை செய்தல் மற்றும் இணையவழி விளையாட்டுகளை ஒழுங்குமுறைப்படுத்துதல் சட்டம், 2022ன்படி தமிழ்நாடு ஓய்வுபெற்ற ஐஏஎஸ் அதிகாரி 'முகமது நசிமுதீன்' ஐ தலைவராகக் கொண்டு

இணையவழி விளையாட்டு ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது.

- ❖ பள்ளிக்கல்வித் துறை செயலராக ஜெ. குமரகுருபரன் நியமிக்கப்பட்டுள்ளார்.
    - மேலும், நிதித் துறை செலவினங்கள் பிரிவு செயலர் பொறுப்பையும் கூடுதலாக கவனிக்கிறார்.
- ❖ நீலகிரி வரையாடு பாதுகாப்புத் திட்டம்:
    - இத்திட்டமானது ரூ.25 கோடி செலவில், நீலகிரி வரையாடுகளின் எண்ணிக்கை, பரவல் மற்றும் சூழலியியல் பற்றிய சிறந்த புரிதலை மேம்படுத்துதல், கணக்கெடுப்புகள் நடத்துதல், நீலகிரி வரையாட்டினை மறு அறிமுகம் செய்தல் மற்றும் கண்காணிப்பு, பாதிக்கப்பட்ட வரையாடுகளுக்கு சிகிச்சை அளித்தல், பணியாளர்களுக்கு பயிற்சி அளித்தல், சூழல் - சுற்றுலா திட்டங்களை செயல்படுத்துதல், போன்றவற்றிற்காக செயல்படுத்தப்படுகிறது.
    - "வரையாடு" என்று மக்களால் பரவலாக அழைக்கப்படும் "நீலகிரி வரையாடு" என்பது மேற்குத் தொடர்ச்சி மலையில் காணப்படும் அழிந்து வரும் இனமாகும்.
    - இது புவிஈர்ப்பு விசைக்கெதிராக கடினமான குன்றின் மீது ஏறும் திறன்களுக்காக புகழ் பெற்றது.
    - இந்த மலை ஆடுகளை "மவுண்டன் மோனார்க்" என்று அழைக்கிறார்கள்.
    - சங்க காலத்தின் ஐம்பெரும் காப்பியங்களில், சிலப்பதிகாரம் மற்றும் சீவகசிந்தாமணியில், நீலகிரி வரையாடு மற்றும் அதன் வாழ்விடம் பற்றிய விளக்கங்கள் இடம்பெற்றுள்ளது.
    - கி.பி 1600-1700-இல் திரிகூடராசப்பக் கவிராயரால் எழுதப்பட்ட குற்றாலக் குறவஞ்சி என்ற நாடகத்தில் நீலகிரி வரையாடு குறித்து "குறத்தி மலை வளம் கூறல்" என்ற பாடலில் விவரிக்கப்பட்டுள்ளது, வரையாடு இப்பகுதியின் பல்லுயிர் செழுமையைக் குறிக்கும் விலங்குகளில் ஒன்றாகும்.
    - தமிழ்நாட்டில் அதன் சுற்றுச்சூழல் மற்றும் கலாச்சார முக்கியத்துவத்திற்கு சான்றாக, நீலகிரி வரையாடு தமிழ்நாட்டின் மாநில விலங்காக அறிவிக்கப்பட்டுள்ளது.

- 1975 இல் நீலகிரி வரையாடு பற்றிய முதல் ஆய்வுகளில் முன்னோடியாக இருந்த டாக்டர் ஈ.ஆர்.சி டேவிதாரின் பிறந்த நாளான அக்டோபர் 7 ஆம் நாள் நீலகிரி வரையாடு தினமாக அவரை சிறப்பிக்கும் வகையில் கொண்டாடப்பட்டு வருகிறது.
- நீலகிரி வரையாடு திட்டப்பணிகளை செயல்படுத்த திட்ட அலுவலகம் கோயம்புத்தூரில் அமைக்கப்பட்டுள்ளது.

❖ தென்னைநார் தொழில்

- ஆரஞ்சு வகை பட்டியலில் இருந்து வெள்ளை வகை பட்டியலுக்கு தென்னைநார் தொழில் மாற்றம்.
- தென்னை நார் உற்பத்தி தொழிற்சாலைகளுக்கு சுற்றுச்சூழல் பாதிப்பு என்ற ஆரஞ்சு வகை கட்டுப்பாடுகளை மாசுக்கட்டப்பாட்டு வாரியம் திரும்பப்பெற்றுள்ளது.

❖ 'மொபைல் முத்தம்மா' என்ற பெயரில், சென்னையில் 1700 உட்பட பல மாவட்டங்களில் உள்ள 9000 ரேஷன் கடைகளில் பே.டி.எம். செயலி வாயிலாக டிஜிட்டல் முறையில் பணம் செலுத்தும் வசதி துவக்கப்பட்டுள்ளது.

❖ நாகப்பட்டினம் சிறு துறைமுகத்தில் இருந்து இலங்கையின் காங்கேசன் துறைமுகத்திற்கு 150 பயணிகள் பயணிக்கும் வகையில் விரைவு பயணிகள் கப்பல் சேவையை தமிழ்நாடு கடல்சார் வாரியம் மற்றும் மத்திய அரசின் துறைமுகங்கள், கப்பல் மற்றும் நீர்வழிப் போக்குவரத்து துறை இணைந்து தொடங்கியுள்ளது.

❖ செர்பியா நாட்டை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் 'நம்பியோ' என்ற தனியார் நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தேசிய அளவில் பொதுமக்களுக்கு பாதுகாப்பான நகரங்கள் பட்டியலில் சென்னை முதலிடத்தை பிடித்துள்ளது.

❖ லிக்னைட் உற்பத்தியில் தமிழ்நாடு முதலிடம் • 2022-23 ஆம் ஆண்டில் 22.480 மில்லியன் டன்களை உற்பத்தி செய்து லிக்னைட் உற்பத்தியில் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது.

❖ கிராமசபைக் கூட்டம்

- கிராம ஊராட்சி வளர்ச்சி திட்டத்தை அங்கீகரித்தல், ஊராட்சிகளின்

பணி முன்னேற்றத்தை கண்காணித்தல், வரவு செலவு ஆய்வு, பயனாளிகள் தேர்வு, திட்ட கண்காணிப்பு ஆகிய அதிகாரங்கள் கிராமசபைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. இதில் மக்கள் நேரடியாக பங்கேற்று, தங்கள் தேவைகளைப் பற்றி விவாதிக்கின்றனர். சட்டப்பேரவை போல, கிராமசபையும் மக்கள் குரலை எதிரொலிக்கும் மன்றமாக உள்ளது.

❖ குடவோலை முறை:

- காஞ்சிபுரம் அடுத்த உத்திரமேரூர் ஜனநாயக தேர்தல் அமைப்பு முறை பிறந்த இடமாக உத்திரமேரூர் கல்வெட்டு கூறுகிறது.
- தேர்தலில் போட்டியிடும் அனைவரது பெயரையும் ஓலைச்சுவடியில் எழுதி குடத்தில் போட்டு குலுக்கி ஒரு ஓலையை எடுப்பார்கள். அதில் யாருடைய பெயர் இருக்கிறதோ, அவர் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுவார்.
- இந்த 'குடவோலை' முறையில்தான் தமிழகத்தில் மக்களாட்சி அமைப்பு மலர்ந்தது. தமிழகத்தில் சோழர் காலம் முதலே கிராமசபை என்ற அமைப்பு இருந்து வருகிறது.

❖ அரசியலமைப்பில் :

- சரத்து 243B - கிராம சபை என்ற சொல்லை வரையறை செய்கிறது. ஒரு மாநிலத்தின் சட்டமன்றம் சட்டப்படி செயல்படுவது போன்ற அதிகாரங்களை ஒரு கிராம சபை
- செயல்படுத்தலாம் மற்றும் கிராம அளவில் அத்தகைய செயல்பாடுகளைச் செய்யலாம்.

❖ தமிழநாட்டில் கிராம சபை கூட்டம் நடைபெறும் தினங்கள்:

1. ஜனவரி 26 - குடியரசு தினம்
2. மார்ச் 22 - உலக தண்ணீர் தினம்
3. மே 1 - உழைப்பாளர் தினம்
4. ஆகஸ்ட் 15- சுதந்திர தினம்
5. அக்டோபர் 2 - காந்தி ஜெயந்தி
6. நவம்பர் 1 - உள்ளாட்சி தினம்

## இந்தியா

- இஸ்ரேல் - ஹமாஸ் இடையே மோதல் தீவிரமாகி உள்ள நிலையில் இஸ்ரேலில் இருந்து இந்தியர்கள் நாடு திரும்புவதற்கு வசதியாக **"ஆபரேஷன் அஜய்"** திட்டத்தை இந்தியா தொடங்கியுள்ளது.
- இளைஞர்களின் மேம்பாட்டுக்காக 'மேரா யுவ பாரத்' (எனது இளைய பாரதம்) என்ற பெயரில் தன்னாட்சி அமைப்பு ஏற்படுத்த மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. சர்தார் வல்லபபாய் படேலின் பிறந்த நாளான அக்டோபர் 31-ம் தேதி இந்த அமைப்பு நாட்டுக்கு அர்ப்பணிக்கப்படும்.
- PM-KISAN திட்டம் மூலம் சிறு விவசாயிகளுக்கு வழங்கப்படும் வருடாந்திர நிதியுதவியை ரூ.6,000 இல் இருந்து ரூ.8,000 ஆக உயர்த்த மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. நாடு முழுதும் உள்ள குறு , சிறு விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் 'பிரதம மந்திரி கிசான் சம்மான் நிதி' ஆரம்பிக்கப்பட்டது.
    - தொடக்கம்: 2019, உத்தரப்பிரதேச மாநிலம்
    - அமைச்சகம் : வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகம்
    - PM-KISAN திட்டம் முதலில் Rythu Bandhu திட்டமாக தெலுங்கானா அரசால் செயல்படுத்தப்பட்டது.
    - பிப்ரவரி 1, 2019 அன்று, இந்தியாவின் 2019 இடைக்கால யூனியன் பட்ஜெட்டின் போது, அமைச்சர் பியூஷ் கோயல் இந்தத் திட்டத்தை நாடு தழுவிய திட்டமாக செயல்படுத்துவதாக அறிவித்தார்.
- உத்திரப் பிரதேச மாநிலத்தின் மாநில நீர்வாழ் உயிரினமாக கங்கை நதி டால்பின் அறிவிக்கப்பட்டுள்ளது.
    - இது இந்தியாவின் தேசிய நீர்வாழ் உயிரானமாக 2010 அறிவிக்கப்பட்டது
- ஜி20 நாடுகளின் சபாநாயகர்கள் பங்கேற்கும் 9-வது பி20 உச்சிமாநாடு டெல்லியில் உள்ள யாசோபூமியில் நடைபெற்றது.
- கோவாவின் முந்திரிக்கு புவியியல் குறியீடு
    - கோவாவில் முதல் முந்திரி தொழிற்சாலை 1926 இல் செயல்படத் தொடங்கியது. முந்திரி 1930 இல் ஏற்றுமதி செய்யப்பட்டது.
    - 1961 வாக்கில், முந்திரி பதப்படுத்தும் தொழில் கோவாவின்

தொழில்துறை உற்பத்தியில் தோராயமாக 60% ஆக இருந்தது, கணிசமான அளவு பல்வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது.

| **2023 இல் இந்தியாவில் சமீபத்தில் சேர்க்கப்பட்ட GI குறிச்சொற்கள்** | | |
|---|---|---|
| **பொருளின் பெயர்** | **வகை** | **நிலை** |
| நரசிங்கப்பேட்டை நாகஸ்வரம் | கைவினை | தமிழ்நாடு |
| திண்டுக்கல் பூட்டுகள் | தயாரிக்கப்பட்டது | தமிழ்நாடு |
| இடு மிஷ்மி டெக்ஸ்டைல்ஸ் | கைவினை | அருணாச்சல பிரதேசம் |
| கோலா மிளகாய் | விவசாயம் | கோவா |
| ஸ்ரீவில்லிபுத்தூர் பால்கோவா | உணவுப்பொருள் | தமிழ்நாடு |
| காஜி நேமு | விவசாயம் | அசாம் |
| கண்டாங்கி சேலை | கைவினை | தமிழ்நாடு |
| காஷ்மீர் குங்குமப்பூ | வேளாண்மை | ஜம்மு & காஷ்மீர் |
| கந்தமால் ஹாலடி | விவசாயம் | ஒடிசா |
| மணிப்பூரி கருப்பு அரிசி | உணவுப்பொருள் | மணிப்பூர் |
| ஹ்மாரம் | கைவினை | மிசோரம் |
| Ngotekherh | கைவினை | மிசோரம் |
| கொடைக்கானல் மலைப்பூண்டு | விவசாயம் | தமிழ்நாடு |
| ரசகோலா | உணவுப்பொருள் | ஒடிசா |
| பழனி பஞ்சாமிர்தம் | உணவுப்பொருள் | தமிழ்நாடு |
| பவண்டும் | கைவினை | மிசோரம் |
| தவல்லோஹ்புவான் | கைவினை | மிசோரம் |
| திரூர் வெற்றிலை (திரூர் வெத்திலா) | விவசாயம் | கேரளா |
| குல்பர்கா தூர் தால் | விவசாயம் | கர்நாடகா |
| மிசோ புவாஞ்சேய் | கைவினை | மிசோரம் |

- **Orunodoi 2.0**

- Orunodoi 2.0 என்பது வறுமை ஒழிப்பு திட்டமாகும், இது சமீபத்தில் அஸ்ஸாம் அரசாங்கத்தால் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின்படி, 26 லட்சம் பெண்களுக்கு மாதம் ரூ. 1250 அவர்களின் வங்கி கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்படும்.

➢ நாகாலாந்தின் முதல் மருத்துவக் கல்லூரி

- மத்திய சுகாதார அமைச்சர் டாக்டர் மன்சுக் எல் மாண்டவியா, நாகாலாந்தின் முதல் மருத்துவக் கல்லூரியான நாகாலாந்து மருத்துவ அறிவியல் மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தை (என்ஐஎம்எஸ்ஆர்) அதிகாரப்பூர்வமாக கோஹிமாவில் உள்ள ஃப்ரீபாகேயில் திறந்து வைத்தார்.

➢ ஒலிம்பிக் கமிட்டி (IOC) கூட்டம்

- பிரதமர் திரு நரேந்திர மோடி 141வது சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி (IOC) கூட்டத்தை இன்று (14 அக்டோபர் 2023) தொடங்கி வைக்கிறார்.

➢ உலக பட்டினி குறியீடு

- உலக பட்டினி குறியீடு பட்டியலில் மொத்தம் 125 நாடுகளில் இந்தியா 111-வது இடத்தில் உள்ளது.
- 2022 இல் 101-வது இடத்தில் இந்தியா இருந்தது குறிப்பிடத்தக்கது.
- அயர்லாந்தை சேர்ந்த கன்சர்ன் வேர்ல்ட் வைட் மற்றும் ஜெர்மனியை சேர்ந்த வெல்ட் ஹங்கர் ஹில்பே ஆகிய நிறுவனங்கள் இப்பட்டியலை வெளியிட்டு வருகின்றன.
- முதன்மையான உலகளாவிய பசி குறியீடு 2006 இல் வெளியிடப்பட்டது.
- GHI 2023 அறிக்கையானது குறியீட்டின் 18வது பதிப்பாகும்.

➢ உலகளாவிய கடல்சார் இந்தியா உச்சிமாநாடு 2023 மும்பையில் உலக கடல்சார் இந்தியா உச்சி மாநாட்டை பிரதமர் மோடி தொடங்கி வைத்தார்.

- இந்தியக் கடல்சார் நீலப் பொருளாதாரத்திற்கான அமிர்தகாலப் பார்வை 2047 என்ற செயல்திட்ட வரைவையும் பிரதமர் வெளியிட்டார்.

➢ போபாலின் மகிளா தானா, ISO 9001:2015 சான்றிதழைப் பெறும் இந்தியாவின் முதல் மகளிர் காவல் நிலையம் ஆகும் .

- ஐஎஸ்ஓ சான்றிதழ் 3 ஆண்டுகளுக்கு வழங்கப்படுகிறது.

- இந்தச் சான்றிதழுடன், மஹிலா தானா போபாலில் 2வது ஐஎஸ்ஓ-சான்றிதழ் பெற்ற காவல் நிலையமாக மாறியுள்ளது. மே 2023 இல், மிஸ்ரோட் காவல் நிலையம் போபாலின் முதல் ISO 9001:2015 சான்றளிக்கப்பட்ட காவல் நிலையமாக மாறியது.

➢ சுப்ரியா VS யூனியன் ஆஃப் இந்தியா

- உச்ச நீதிமன்றம் தீர்ப்பு : ஒரே பாலின திருமணத்தை நாடாளுமன்றம் மட்டுமே அங்கீகரிக்க அல்லது ஒழுங்குபடுத்த முடியும் என்று உச்ச நீதிமன்றத்தின் அரசியலமைப்பு அமர்வு கூறியுள்ளது.

➢ 'உலக உணவு இந்தியா, 2023'

- இந்திய அரசின் கோரிக்கையை ஏற்று, 2023-ம் ஆண்டு சர்வதேச சிறுதானிய ஆண்டாக கொண்டாடப்படும் என ஐ.நா.சபையின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு அறிவித்துள்ளது.
- இதன்ஒரு பகுதியாக, வரும் நவம்பர் 3 முதல் 5-ம் தேதி வரை டெல்லியில் உள்ள பிரகதி மைதானத்தில் 'உலக உணவு இந்தியா, 2023' என்ற பெயரில் கண்காட்சி நடை பெற உள்ளது.

➢ உலகளாவிய ஓய்வூதியக் குறியீடு:

2023 உலகளாவிய ஓய்வூதியக் குறியீட்டில் இந்தியாவின் தரவரிசை 47 நாடுகளில் 45 வது இடத்திற்குச் சரிந்துள்ளது.

1. 2022 ஆம் ஆண்டில், 44 நாடுகளில் இந்தியா 41 வது இடத்தில் இருந்தது.
2. 2021ல், 43 நாடுகளில் இந்தியா 40வது இடத்தில் இருந்தது.

➢ என்எல்சி இந்தியா கிரீன் எனர்ஜி நிறுவனம்

- பழுப்பு நிலக்கரி நிறுவனமான என்எல்சி(NLC) இந்தியா லிமிடெட் நிறுவனம், புதுப்பிக்கத்தக்க எரி சக்தி திட்டங்களை அதிகரிக்க முற்றிலும் சொந்தமான துணை நிறுவனம் ஒன்றை தொடங்கியுள்ளது.
- இந்தத் துணை நிறுவனமான 'என்எல்சி இந்தியா கிரீன் எனர்ஜி நிறுவனம்' 2030-ஆம் ஆண்டுக்குள் 6 ஜிகாவாட் திறனுள்ள பசுமை மின் திட்டங்களை நிறுவும் என்று மத்திய நிலக்கரித் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

➢ பஞ்சாப் மாநிலம் அமிர்தசரஸில் உள்ள அட்டாரி-வாகா எல்லையில் 418 அடி உயரத்தில் அமைக்கப் பட்டுள்ள நாட்டின் மிக உயரமான தேசியக் கொடியை

மத்திய சாலை போக்குவரத்துத் துறை அமைச்சர் நிதின் கட்கரி ஏற்றி வைத்தார்.

- உத்தரபிரதேச கிராமப்புறங்களில் 'டிஜிட்டல் டாக்டர் கிளினிக்' என்ற பெயரில் தொலைநிலை மருத்துவ ஆலோசனை மையங்கள் தொடங்கப்பட உள்ளன. இவற்றை தனியார் மருத்துவமனை உதவியுடன் அமைக்க முதல்வர் யோகி ஆதித்யநாத் அரசு திட்டமிட்டுள்ளது.
- சிறந்த சுற்றுலா கிராமம் : உலக சுற்றுலா அமைப்பு (WTO) அறிவித்த 2023 ஆம் ஆண்டுக்கான 54 சிறந்த சுற்றுலா கிராமங்களின் பட்டியலில் இந்தியாவின் Dhordo என்ற கிராமம் இடம் பெற்றுள்ளது.
- டிஜிட்டல் நாணயம் : இந்திய ரிசர்வ் வங்கி E-ரூபாய்க்கான சோதனைத் திட்டமான PILOT திட்டத்தை தொடங்கியுள்ளது.
    - மத்திய வங்கி டிஜிட்டல் நாணயம் (CBDC) என்பது மத்திய வங்கியால் நேரடியாக அதன் குடிமக்களுக்கு வழங்கப்படும் பணத்தின் புதிய வடிவமாகும்.
- பாரத் டெக்ஸ் 2024:
    - இந்தியாவின் ஜவுளித் துறை, தொழில் அமைப்புகளுடன் இணைந்து, உலகின் மிகப்பெரிய ஜவுளி நிகழ்வாகக் கூறப்படும் "பாரத் டெக்ஸ் 2024" ' ஐ பிப்ரவரி 26, 2024 முதல் பிப்ரவரி 29, 2024 வரை புது தில்லியில் திட்டமிடப்பட்டுள்ளது.
- 2030 இல் உலகின் 3 வது பெரிய பொருளாதார நாடாகும் இந்தியா: வரும் 2030 ஆம் ஆண்டு ஜப்பானைப் பின்னுக்குத் தள்ளி உலகின் 3 ஆவது பெரிய பொருளாதாரமாக இந்தியா உருவாகுமென அமெரிக்காவின் எஸ் அண்ட் பி குளோபல் ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.
- நிகழ்நேரத்தில் காற்றின் தரத்தை அளவிடும் சுவிட்சர்லாந்து நாட்டின் தொழில்நுட்ப நிறுவனமான IQAir நிறுவனத்தினால் 109 இடங்களில் மேற்கொண்ட மதிப்பீட்டில் மிகவும் மாசுபட்ட நகரங்களின் பட்டியலில் மும்பை இரண்டாவது இடத்தில் உள்ளது.
- தேசியக் குடும்ப சுகாதார ஆய்வு (NFHS - 5) தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள புள்ளிவிவர அறிக்கையில், இந்தியாவில் பெண் தொழிலாளர்கள் பங்கேற்பு 25% ஆகிய உள்ளது என்றும், அதே சமயம் ஆண் தொழிலாளர்கள் பங்கேற்பு

57.5% ஆக உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

- சாதிவாரி கணக்கெடுப்பு
    - பிஹார் அரசு நடத்திய சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பு நாடு தழுவிய அளவில் பெரும் விவாதப் பொருளாக மாறியுள்ளது. பிஹாரில் 15% மக்கள் மட்டுமே உயர் சாதியினர். 63% பேர் பிற்படுத்தப்பட்ட வகுப்பையும், 22% பேர் பட்டியல் வகுப்பையும் சேர்ந்தவர்கள் என கணக்கெடுக்கப் பட்டுள்ளது. சுதந்திர இந்தியாவில் இவ்வளவு விரிவான சாதிவாரி என்று மக்கள் தொகை கணக்கெடுப்பு வெளியிடப்படுவது இதுவே முதல் முறை.

- மக்கள் தொகை கணக்கெடுப்பு:
    - இந்தியாவின் முதல் மக்கள்தொகை கணக்கெடுப்பு 1872 இல் மேயோ பிரபுவால் நடத்தப்பட்டது. முழுமையான மக்கள் தொகை கணக்கெடுப்பு 1881 இல் நடத்தப்பட்டது.
    - இந்திய கலாச்சாரத்தின் சக்திவாய்ந்த கலாச்சார அடித்தளமான சாதி, கடைசியாக 1931 இல் இந்திய மக்கள்தொகை கணக்கெடுப்பில்

- மண்டல் ஆணையம்:
    - பிரதம மந்திரி மொரார்ஜிதேசாய் தலைமையில் 1979-ஆம் ஆண்டு ஜனவரியில் பி.பி. மண்டல் தலைமையில், சட்டபிரிவு 340-ன் படி பின்தங்கிய வகுப்பினருக்கான ஆணையம் ஏற்படுத்தப்பட்டது.
    - இந்த ஆணைக்குழுவின் அறிக்கை வி.பி. சிங் பிரதமராக இருந்தபோது 1990 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.
    - மக்கள்தொகையில் 52% உள்ள பிற்படுத்தப்பட்ட வகுப்பார்க்கு மத்திய அரசுப் பணிகளில் 27% வழங்கிட மண்டல் ஆணையம் பரிந்துரைத்தது.
    - மண்டல் கமிஷனின் அறிக்கையை மையமாகக் கொண்டு இந்திரா சகானி Vs. இந்திய யூனியன் வழக்கு நடைபெற்றது.

- சட்டநாதன் ஆணையம் :
    - பிற்படுத்தப்பட்டோர் நலன் குறித்து ஆராய்ந்திட தமிழ்நாடு அரசால் சட்டநாதன் தலைமையில் ஒரு ஆணையம் அமைக்கப் பட்டது.
    - அந்த ஆணையத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில் தமிழ்நாட்டில் 1971 ஆம் ஆண்டு

- பிற்படுத்தப்பட்டோருக்கு 31%, தாழ்த்தப்பட்டோருக்கு 18% என இட ஒதுக்கீட்டு வரம்பு மாற்றியமைக்கப்பட்டது.

- தேசத்தைக் கட்டி எழுப்பும் பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்க இளைஞர்களுக்கு வாய்ப்பளிக்கும் வகையில் நாடுதழுவிய அளவில் 'மேரா யுவ பாரத்' தளம் சர்தார் வல்லபாய் பட்டேல் பிறந்தநாளான அக்.31ம் தேதி தொடங்கப்படும் என்று பிரதமர் மோடி அறிவித்துள்ளார்.

**விருதுகள்**

- எழுத்தாளர் சிவசங்கரிக்கு 2022 ஆம் ஆண்டிற்கான ‘சரஸ்வதி சம்மான்’ இலக்கிய விருது வழங்கப்பட்டது.
  - 1991 முதல் இவ்விருது வழங்கப்படுகிறது.
- இந்திய தேசிய திரைப்பட மேம்பாட்டுக் கழகம் சார்பில் 54வது இந்திய சர்வதேச திரைப்பட விழாவில் (IFFI) சத்யஜித் ரே வாழ்நாள் சாதனையாளர் விருது அமெரிக்க நடிகரும் தயாரிப்பாளருமான மைக்கேல் டக்ளஸுக்கு வழங்கப்படவுள்ளது.
- உலகளாவிய தலைமைத்துவத்திற்கான விருது : இந்தியாவின் தலைமை நீதிபதி (CJI) DY சந்திரசூட், ஹார்வர்ட் சட்டப் பள்ளியால் வழங்கப்படும் 'உலகளாவிய தலைமைத்துவத்திற்கான விருதை' பெற்றுள்ளார்.
- ஒடிசாவில் உள்ள உள்ளூர் சமூகங்களால் "பிஹானா திதி" அல்லது "விதை பெண்மணி" என்று அன்புடன் அழைக்கப்படும் இந்திய வேளாண் விஞ்ஞானி டாக்டர். ஸ்வாதி நாயக், 2023 ஆம் ஆண்டிற்கான நார்மன் இ. போர்லாக் விருதுடன் கௌரவிக்கப்பட்டார் .
- அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையில் அவர்கள் ஆற்றிய பங்களிப்பிற்காக, இரண்டு இந்திய-அமெரிக்க விஞ்ஞானிகளான அசோக் காட்கில் மற்றும் சுப்ரா சுரேஷ் ஆகியோருக்கு, அமெரிக்க அதிபர் ஜோ பிடன், நாட்டின் உயரிய அறிவியல் விருதுகளை வழங்கி கவுரவித்துள்ளார்.
- ஜம்மு காஷ்மீரில் உள்ள உதம்பூர் ராணுவ நிலையம் 'சிறந்த பசுமைமிகு ராணுவ நிலையம்' என சிறப்பிக்கப்பட்டுள்ளது.
- காஜிண்ட்-2023 பயிற்சி என்ற கூட்டு ராணுவப் பயிற்சியில் பங்கேற்பதற்காக 120 பேர் கொண்ட இந்திய ராணுவம் மற்றும் இந்திய விமானப்படைக் குழு

DHEERAN IAS ACADEMY

இன்று கஜகஸ்தான் புறப்பட்டுச் சென்றது.

- இந்தியா- கஜகஸ்தான் இடையேயான கூட்டுப் பயிற்சி, 2016-ஆம் ஆண்டு 'பிரபால் டோஸ்டைக்' என்ற பெயரில் தொடங்கப்பட்டது.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

- 700 மெகாவாட் உற்பத்தி திறன் கொண்ட காக்ராபூர் அணுமின் நிலையம் தனது முழு உற்பத்தி திறனை எட்டியுள்ளது.
  - உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட முதல் அணுமின் நிலையம்.
- சூரியனின் புறவெளியை ஆய்வு செய்வதற்காக ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து PSLV c 57 ராக்கெட் மூலம் ஆதித்யா எல் – 1 விண்கலம் ISROஆல் ஏவப்பட்டுள்ளது.
  - பூமியில் இருந்து 15 இலட்சம் கி. மீ. இல் ‘லக்ராஞ்சியன் பாயிண்ட் 1’ (ஈர்ப்பு விசை சமமாக இருக்கும்) பகுதியில் நிலைநிறுத்தப்படவுள்ளது. இந்த புள்ளியை ஆதித்யா விண்கலம் 125 நாட்களில் அடையும்.
  - 7 பேலோடுகளை கொண்டுள்ளது.
  - சூரியனை ஆய்வு செய்யும் 4 வது நாடாக இந்தியா உள்ளது.
    1. அமெரிக்கா
    2. ஜெர்மனி
    3. ஐரோப்பிய யூனியன்
    4. இந்தியா
  - திட்ட இயக்குனர் – நிகர் ஷாஜி
    1. தென்காசி மாவட்டததை சேர்ந்தவர்.
- Project 17 Alpha (P17A) திட்டத்தின் கீழ் உள்நாட்டிலேயே கட்டப்பட்ட 7 வது போர்க்கப்பலான மகேந்திரகிரி போர்க்கப்பல் நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்டது.
  - 75% பொருட்கள் உள்நாட்டு நிறுவனங்களிடம் இருந்து கொள்முதல் செய்யப்பட்டது.
  - Project 17 Alpha (P17A)

  1. 2019 இல் அறிமுகம் செய்யப்பட்டது.
  2. இதன் கீழ் 7 கப்பல்கள் கட்டப்பட்டுள்ளன.

3. நீலகிரி 2019, ஹிம்கிரி 2020, உதயாகிரி 2022, துணகிரி 2022, தாராகிரி 2022, விந்தயகிரி 2023, மகேந்திரகிரி 2023 .

- இந்தியாவின் முதல் ரோபோடிக் செயல்முறை ஆட்டோமேஷன் (RPA) ஆய்வகமானது எதிர்காலத் திறன் பிரைம் திட்டத்தின் கீழ் NIELIT கோரக்பூரில் தொடங்கப்பட்டது.
  - ரோபோடிக் செயல்முறை ஆட்டோமேஷன் (RPA) என்பது ஒரு மென்பொருள் தொழில்நுட்பமாகும்.
  - இது டிஜிட்டல் அமைப்புகள் மற்றும் மென்பொருளுடன் தொடர்பு கொள்ளும் மனிதர்களின் செயல்களைப் பின்பற்றும் மென்பொருள் ரோபோக்களை உருவாக்கவும், வரிசைப்படுத்தவும் மற்றும் நிர்வகிக்கவும் எளிதாக்குகிறது.
- ககன்யான்
  - வரும் 2024 டிசம்பரில் விண்வெளிக்கு மனிதர்களை அழைத்துச் செல்லும் ககன்யான் விண்கலத்தின் புகைப்படத்தை இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) வெளியிட்டுள்ளது. இந்தப் பணிக்கான ஆளில்லா விண்கலப் பரிசோதனையை விரைவில் தொடங்கவுள்ளதாகவும் இஸ்ரோ கூறியுள்ளது.
  - 2007-ல் ரூ.10,000 கோடி பட்ஜெட்டில் விண்வெளிக்கு மனிதர்களை அனுப்பும் திட்டம் தொடங்கப்பட்டது. 2014-ல் இந்த திட்டத்துக்கு ககன்யான் என பெயரிடப்பட்டு ஆராய்ச்சிகள் தீவிரப்படுத்தப்பட்டன.

❖ நோக்கம் :
  - பூமியிலிருந்து சுமார் 400 கி.மீ. தூர சுற்றுவட்டப் பாதைக்கு விண்கலம் மூலம் 2-3 விண்வெளி வீரர்களை அனுப்பி, அங்கு 1 முதல் 3 நாள் ஆய்வுப் பணிக்குப் பிறகு அவர்களை பத்திரமாக மீண்டும் பூமிக்கு அழைத்து வருவது, அதாவது குறிப்பிட்ட இந்திய கடல்பகுதியில் இறங்கச் செய்வதுதான் ககன்யான் திட்டத்தின் நோக்கமாகும்.

❖ ஏவு வாகனம்:
  - GSLV Mk III

❖ ஆளில்லா விண்வெளிப் பயணம்.
  - இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) 'வியோமித்ரா'

எனப்படும் மனித உருவத்தை வடிவமைத்து தயாரித்துள்ளது.

- இது ஒரு செயற்கை நுண்ணறிவு -செயல்படுத்தப்பட்ட ரோபோ ஆகும்.
- இது பயணத்தின் போது அதிர்வுகளையும் அதிர்ச்சியையும் எதிர்க்கும் மற்றும் முகபாவங்கள், குரல் மற்றும் பார்வை திறன்கள் உட்பட மனிதனைப் போல தோற்றமளிக்கும்.

➢ மனிதர்களை விண்ணுக்கு அனுப்பும் 'ககன்யான்' திட்டத்தின் முதல்கட்ட பரிசோதனையாக, டிவி-டி1 ராக்கெட் மூலம் ஆளில்லா மாதிரி விண்கலம் இன்று காலை விண்ணில் செலுத்தப்பட்டது. விண்கலத்தின் (Crew Module) மாதிரி கலம், தரையில் இருந்து 17 கி.மீ. தூரம் வரை அனுப்பப்பட்டு, மீண்டும் பத்திரமாக பூமிக்கு கொண்டுவரப்படும்.

➢ கணைய புற்றுநோயை முன்கூட்டியே கண்டறிய உயிரி தொழில்நுட்பம் கணைய புற்றுநோயை முன்கூட்டியே கண்டறிய உதவும் உயிரி குறிப்பான் (பயோ-மார்க்கர்) தொழில்நுட்பத்தை மேம்படுத்தும் ஆராய்ச்சியை சென்னை ஐஐடியின் ஆற்றல்சார் மையம் மேற்கொண்டு வருகிறது.

- உயிரிழப்பை ஏற்படுத்தும் புற்றுநோய்களில் கணைய புற்றுநோய் 4வது இடத்தில் உள்ளது.

➢ மத்தியமேற்கு வங்கக்கடலில் மையம் கொண்டிருந்த தாழ்வு பகுதி ஆழ்ந்த தாழ்வு மண்டலமாக மாறியது. இந்த ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் புயலாக வலுப்பெற்று உள்ளது. ஈரான் நாடு பரிந்துரைந்துள்ள 'ஹாமூன்' என்ற பெயர் இந்த புயலுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

➢ வியாழன் கோளில் ஜெட் காற்று வியாழன் கோளின் தாழ்மட்டப் படையடுக்கு மண்டலத்தில் அதிவேக காற்றுப் புனல் (ஜெட் காற்று) கண்டறியப்பட்டுள்ளது.

➢ 'அப்னா சந்திரயான்':

- சந்திரயான்-3 திட்டத்தால் ஈர்க்கப்பட்ட வினாடி வினாக்கள் மற்றும் புதிர்கள் போன்ற செயல்பாட்டு அடிப்படையிலான ஆதரவுப் பொருட்களை வழங்கும் 'அப்னா சந்திரயான்' போர்டல், மத்திய கல்வி மற்றும் திறன் மேம்பாட்டு அமைச்சர் தர்மேந்திர பிரதான் அவர்களால் தொடங்கப்பட்டது.

➢ கழிவு நீரிலிருந்து மாசுக்களை அகற்றும் திடப்பொருள்: கழிவுநீரில் இருந்து மாசுக்களை அகற்றும் 'ஏரோஜெல்' எனும் திடப்பொருளை கண்டறிந்து

சென்னை ஐஐடி சாதனைப்படைத்துள்ளது.

- இந்த கண்டுபிடிப்பின் மூலம் கழிவு நீரில் இருந்து 76சதவீத மாசுக்களை அகற்ற முடியும் என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

➢ சிக்கிம் மாநிலத்தில் உள்ள லேசன் பள்ளத்தாக்கில் உருவாகும் டீஸ்டா ஆற்றில் திடீரென நிகழ்ந்த மேக வெடிப்பால் பயங்கர

❖ மேகவெடிப்பு என்றால் என்ன?

- சுமார் 20 முதல் 30 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் ஒரு மணி நேரத்தில் 10 சென்டி மீட்டருக்கு மேல் மழைப்பொழிவு ஏற்பட்டால் அது மேக வெடிப்பு எனக் கணக்கிடப்படுகிறது.

❖ மேகவெடிப்பு எவ்வாறு ஏற்படுகிறது?

- பருவமழைக் காலங்களில், கனமான தண்ணீர் துளிகளுடன் மேகம் தவழ்ந்து வரும்பொழுது தரையிலிருந்து மேல் எழும்பும் வெப்பமான காற்று மழைத்துளி விழுந்து விடாத வண்ணம் தடுக்கும். கிட்டத்தட்ட மேகத்தின் வெளியே வந்துவிட்ட நீரை மீண்டும் மேகத்திற்கு உள்ளேயே இந்த வெப்பக்காற்று அனுப்பும்.
- இவ்வாறு கனமான தண்ணீர் துளிகளை மேகத்திற்கு அனுப்பும் வெப்பக்காற்று அழுத்தமே ஒரேநேரத்தில் மொத்தமாக மழையை கொட்டச் செய்துவிடும்.
- பெரும்பாலான மேகவெடிப்புகள் மழைக்கால மாதங்களில் இமயமலை மாநிலங்களில் நிகழ்கின்றன.

➢ இந்தியாவில் ஏற்பட்ட மேகவெடிப்புகள்:=

- ஜூன் 2013 இல் உத்தரகாண்ட் மாநிலத்தில் ஏற்பட்ட மேக வெடிப்பு திடீர் வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகளை ஏற்படுத்தியது மற்றும் ஆயிரக்கணக்கான உயிர் சேதங்களை ஏற்படுத்தியது.
- செப்டம்பர் 2014 இல் ஜம்மு மற்றும் காஷ்மீர் மாநிலத்தில் ஏற்பட்ட மேக வெடிப்பு, வெள்ளம் மற்றும் நிலச்சரிவை ஏற்படுத்தியது.

## வெளிநாட்டு நிகழ்வுகள்

➢ சிங்கப்பூரின் 9 வது அதிபராக தர்மன் சண்முகரத்னம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

- உக்ரைனில் உள்ள விளையாட்டு அமைப்புகள் தொடர்பாக ரஷ்ய ஒலிம்பிக் கமிட்டியை சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி இடைநீக்கம் செய்துள்ளது.
    - கிழக்கு உக்ரைனில் ரஷ்யாவால் சட்டவிரோதமாக இணைக்கப்பட்ட நான்கு பிராந்தியங்களில் ROC விளையாட்டு அமைப்புகளை இணைத்ததை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- 'கோரி' ஏவுகணை : பாகிஸ்தான் தனது 'கோரி' ஏவுகணை மற்றும் அதனை ஏவும் சாதனங்களை வெற்றிகரமாக ஏவி சோதித்துள்ளது.
- இலங்கைக்கு விசா இல்லாத பயணம் : முன்னோடி திட்டத்தின் ஒரு பகுதியாக, இந்தியா, சீனா மற்றும் ரஷ்யா உள்ளிட்ட ஏழு நாடுகளைச் சேர்ந்த பார்வையாளர்களுக்கு விசா இல்லாத நுழைவு முயற்சியை இலங்கை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இஸ்ரேல் - பாலஸ்தீனம் போர்
    - ஆபரேஷன் அல்-அக்ஷா ஃபிளட்' என்ற பெயரில் தாக்குதலை ஹமாஸ் தீவிரவாதிகள் தொடங்கியுள்ளனர்.
    - பாலஸ்தீனத்தின் காசா பகுதி கடந்த 2007-ம் ஆண்டு ஹமாஸ் தீவிரவாத அமைப்பின் கட்டுப்பாட்டில் வந்தது.
    - அப்போதிருந்தே இஸ்ரேல்-பாலஸ்தீனம் இடையே பல மோதல்கள் நடந்துள்ளன.
- போருக்கான காரணம் :
    - இஸ்ரேல் மீது அரபு நாடுகள் கடந்த 1973-ம் ஆண்டு அக்டோபர் 7-ம் தேதி தாக்குதல் நடத்தின. அன்றைய தினம் யூதர்களின் காலண்டரில் மிகவும் புனித மான நாள் ஆகும்.இந்த தாக்குதலின் 50-ம் ஆண்டை முன்னிட்டு நேற்று இஸ்ரேல் மீது ஹமாஸ் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர்.
- இஸ்ரேல் பாலஸ்தீன போர்கள்:
    - 1967 - கிழக்கு ஜெருசலேமை இஸ்ரேல் கைப்பற்றியது.
    - 1973 இல் சிரியாவும் எகிப்தும் இஸ்ரேலுக்கு எதிராக வான்வழித் தாக்குதல்களை நடத்தியபோது யோம் கிப்பூர் போர் வெடித்தது.
    - 1982 இல், இஸ்ரேல் லெபனானை ஆக்கிரமித்து பாலஸ்தீனிய விடுதலை அமைப்பை (PLO) வெளியேற்றியது.
- இஸ்ரேல் பாலஸ்தீன போரில் சிக்கியுள்ள இந்தியர்களை அழைத்துவர

ஆபரேஷன் அஜய் திட்டத்தின் கீழ் மத்திய அரசு சிறப்பு விமானங்களை அனுப்புகிறது.

❖ இந்தியாவின் மற்ற திட்டங்கள் :

- ஆபரேஷன் காவேரி 2023: சூடானில் ராணுவம் ஆட்சியை கைப்பற்றியதால், ராணுவத்துக்கும் துணை ராணுவத்துக்கும் இடையே மோதல் ஏற்பட்டதால் இந்திய விமானப் படையின் சி-130 ரக விமானம், ஐஎன்எஸ் சுமேதா கப்பல் ஆகியவற்றின் மூலம் இந்தியர்கள் மீட்டு வரப்பட்டனர்.
- ஆபரேஷன் தோஸ்த்' 2023: பூகம்பத்தால் பாதித்த துருக்கியில் இந்திய மீட்பு குழுவினர் 'ஆபரேஷன் தோஸ்த்' என்ற பெயரில் மீட்பு பணியை மேற்கொண்டனர்.
- ஆபரேஷன் கங்கா 2022: உக்ரைன் - ரஷ்யா போர் நடைபெறும் பகுதியில் சிக்கித் தவிக்கும் இந்தியர்களை மீட்பதற்காக, மத்தியஅரசால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை.
- ஆபரேஷன் தேவிசக்தி 2021: ஆப்கானிஸ்தான் இஸ்லாமியக் குடியரசின் வீழ்ச்சி மற்றும் தலைநகரான காபூல் தலிபான் வசம் வீழ்ந்த பிறகு ஆப்கானிஸ்தானில் இருந்து இந்திய குடிமக்கள் மற்றும் வெளிநாட்டினரை வெளியேற்றுவதற்காக இந்திய ஆயுதப்படைகளின் நடவடிக்கையே ஆபரேஷன் தேவி சக்தி ஆகும்.
- ஆபரேஷன் சமுத்ர சேது 2020: கரோனா வைரஸ் லாக்டவுனால் தாயகம் திரும்ப முடியாமல் வெளிநாடுகளில் சிக்கித் தவித்த இந்தியர்களை கடல்வழியாக அழைத்து வர செயல்படுத்தப்பட்ட திட்டம் ஆகும்.

## விளையாட்டு

➢ ஆடவர் ஹாக்கி 5 ஆசியக் கோப்பைப் போட்டியில் பாகிஸ்தானை 2-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி இந்தியா சாம்பியன் ஆனது.

➢ அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடைபெறும் 2028 ஒலிம்பிக் போட்டியில் பேஸ்பால்/சாஃப்ட் பால், கிரிக்கெட் (டி 20), ஃபிளாக் கால்பந்து, லாக்ரோஸ், ஸ்குவாஷ் ஆகிய விளையாட்டுகளை இணைப்பதற்கு ஒலிம்பிக் கமிட்டி ஒப்புதல் அளித்துள்ளது.

- சீனாவின் ஹாங்சோ நகரில் செப்டம்பர் 23 இல் ஆரம்பித்த 19-வது ஆசிய விளையாட்டுப் போட்டிகள் அக்டோபர் 8 இல் நிறைவுற்றன. இந்தப் போட்டியில் இந்தியா முதல் முறையாக 28 தங்கம் உட்பட 107 பதக்கங்களுடன் 4-வது இடத்தைப் பிடித்துள்ளது.
    - இதில் இந்தியா சார்பில் 661 பேர் கலந்து கொண்டு பல்வேறு பிரிவுகளில் பங்கேற்றனர்.

- இந்தியா வென்ற பதக்கங்கள் :
    - 28 தங்கம்
    - 38 வெள்ளி
    - 41 வெண்கலம்
    - மொத்தம் 107.

- ஆசிய விளையாட்டு போட்டி:
    - ஆசிய விளையாட்டுப் போட்டியானது, நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் ஆசியாவின் மிகப்பெரிய விளையாட்டுப் போட்டியாகும் .
    - இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு, பல ஆசிய நாடுகள் சுதந்திரம் பெற்றன மற்றும் இந்திய சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் உறுப்பினரான குரு தத் சோந்தி, அனைத்து ஆசிய நாடுகளும் பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய ஒரு விளையாட்டு நிகழ்வாக ஆசிய விளையாட்டுகளின் யோசனையை முன்மொழிந்தார்.
    - முதல் ஆசிய விளையாட்டுப் போட்டிகளின் தொகுப்பாளராக இந்தியா இருந்தது. முதல் ஆசிய விளையாட்டுப் போட்டிகள் 1951 ஆம் ஆண்டு புதுதில்லியில் நடைபெற்றது.

- ஆசிய விளையாட்டு போட்டி 2024:
    - 20வது ஆசிய விளையாட்டுப் போட்டிகள் 2026ல் ஜப்பானின் நகோயாவில் நடைபெற உள்ளது .
    - 19வது ஆசிய விளையாட்டுப் போட்டியின் ஜோதிக்கு "நித்திய சுடர்" என்று பெயரிடப்பட்டுள்ளது.

- பாரா ஆசிய விளையாட்டுப் போட்டிகள் : நான்காவது பாரா ஆசிய விளையாட்டுப் போட்டிகள் அக்டோபர் 22 முதல் அக்டோபர் 28 வரை

நடைபெறுகிறது.

- வில்வித்தைப் போட்டியில் இந்திய வீராங்கனை ஷீத்தல் தேவி தனிநபர் பிரிவில் தங்கப் பதக்கம் வென்றார்.
- சீனாவில் உள்ள ஹாங்சோவில் நடந்த ஆசிய பாரா விளையாட்டுப் போட்டியில், இந்திய அணி 111 பதக்கங்களை வென்று சாதனை படைத்தது.

➢ தேசிய விளையாட்டுப் போட்டி: தற்போது கோவாவில் நடைபெற்று வரும் விளையாட்டுப் போட்டியின் நான்காவது நாளில் 37 தங்கம், 19 வெள்ளி மற்றும் 22 வெண்கலம் என 78 பதக்கங்களுடன் 2023 தேசிய விளையாட்டுப் போட்டியில் மகாராஷ்டிரா பதக்கப் பட்டியலில் முதலிடத்தில் உள்ளது.

**நியமனங்கள்**

➢ இந்திய ராணுவத்தின் 29ஆவது தலைமை தளபதியாக ஜெனரல் மனோஜ் பாண்டே, பொறுப்பேற்றார்.

➢ ஏர் மார்ஷல் சாதனா எஸ். நாயர் ராணுவத்தின் மருத்துவமனை சேவைகள் (ஆயுதப் படைகள்) இயக்குநர் ஜெனரலாகப் பொறுப்பேற்றார், ஏர் மார்ஷல் பதவிக்கு அவர் பதவி உயர்வு பெற்றவுடன் இந்த மதிப்புமிக்க பதவியை வகிக்கும் முதல் பெண்மணி என்ற பெருமையைப் பெற்றார்.

**முக்கிய தினங்கள்**

➢ உலக மாணவர் தினம்
- ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 15 அன்று கொண்டாடப்படுகிறது.
- இது மறைந்த இந்திய குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே அப்துல்கலாம் அவர்களின் பிறந்த நாளில் கொண்டாடப்படுகிறது.

➢ வறுமை ஒழிப்புக்கான சர்வதேச தினம்
- டிசம்பர் 22, 1992 இல் நிறைவேற்றப்பட்ட 47/196 தீர்மானத்தின் மூலம், ஐநா பொதுச் சபை அக்டோபர் 17 ஆம் தேதியை வறுமை ஒழிப்புக்கான சர்வதேச தினமாக அறிவித்தது.
- 2023 க்கான கருப்பொருள்: "கண்ணியமான வேலை மற்றும் சமூகப் பாதுகாப்பு: அனைவருக்கும் கண்ணியத்தை நடைமுறைப்படுத்துதல்"

➢ ITBP நிறுவன தினம் : இந்திய-சீனா எல்லையைப் பாதுகாக்கும் இந்திய-திபெத் எல்லை பாதுகாப்பு படையின் (ITBP) நிறுவன தினம் - oct 24.

- இந்திய - திபெத் எல்லைக் காவல்படை 1962 அக்டோபர் 24ல் மத்திய சேமக் காவல் படைச் சட்டம் மூலமாக உருவாக்கப்பட்டது.

➢ தேசிய ஒற்றுமை தினம்

- சர்தார் வல்லபாய் படேலின் பிறந்தநாளான அக்டோபர் 31ஆம் தேதி தேசிய ஒற்றுமை தினம் அல்லது ராஷ்டிரிய ஏக்தா திவாஸ் என இந்திய அரசு 2014 இல் அறிவித்தது.

➢ தனிப்பெருங்கருணை நாள்

- 2021 முதல் வள்ளலார் பிறந்தநாளான அக் டோபர் 5-ம் தேதி தனிப்பெருங்கருணை நாளாக கடைபிடிக்கப்படுகிறது. 'இவர் அருட்பிரகாச வள்ளலார்' என்று அழைக்கப்படுகிறார்.
- இயற்பெயர் : ராமலிங்க அடிகளார்
- பிறந்த இடம் : கடலூர் மாவட்டம் சிதம்பரத்தில் இருந்து 10 மைல் தொலைவில் உள்ள மருதூர்
- பிறந்த தேதி : 1823-ம் ஆண்டு அக்டோபர் 5-ம் தேதி பிறந்தார்.

❖ சேவைகள்:

- அனைத்து நம்பிக்கைகளிலும் உள்ள உண்மை ஒன்றே என்பதை குறிக்கும் விதமாக சமரச சுத்த சன்மார்க்கத்தை நிறுவினார்.
- வட லூரில் சத்திய ஞான சபையை எழுப்பினார்.
- 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்று பாடிய இவர், மக்களின்
- பசித் துயர் போக்க சத்திய தரும சாலையை நிறுவினார். அவர் ஏற்றிய அடுப்பு இன்று வரை அணையாமல் தொடர்ந்து எரிந்தபடி, பசி யோடு இருக்கும் மக்களின் வயிற்றை நிரப்பிக்கொண்டு இருக்கிறது.

❖ எழுதிய நூல்கள்:

- மனுமுறை கண்ட வாசகம்,
- ஜீவ காருண்ய ஒழுக்கம் ஆகிய உரை நடைகளை எழுதியுள்ளார்.
- இவர் பாடிய பாடல்களின் திரட்டு 'திருவருட்பா' என்று அழைக்கப்படுகிறது. இது 6 திருமுறைகளாக பகுக்கப்பட்டுள்ளது. திருவருட்பா 6-ம் திருமுறையில், “எந்த சமயத்தின் நிலைப்பாட்டையும், எல்லா மதநெறிகளையும் சம்மதம் ஆக்கிக் கொள்கிறேன்” என்றார்.

- உலக உணவு நாள்:
    - 16.10.2023
    - ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (FAO) ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 16 ஆம் தேதியை உலக உணவு தினமாகக் கொண்டாடுகிறது . 1945 இல் FAO தொடங்கப்பட்டதைக் கொண்டாடுவதற்காக இந்த நாள் கொண்டாடப்படுகிறது.
    - உலக உணவு தினம் முதன்முதலில் 1979 இல் அனுசரிக்கப்பட்டது.
- ஐ. நா. தினம்
    - 1945 இல் ஐநா சாசனம் அமலுக்கு வந்த ஆண்டை நினைவுகூரும் வகையில் 1948 ஆம் ஆண்டு முதல் அக்டோபர் 24 இல் அனுசரிக்கப்படுகிறது.
- ஐக்கிய நாடுகள் சபை:
    - ஐக்கிய நாடுகள் சபை (UN) என்பது 1945 இல் நிறுவப்பட்ட ஒரு சர்வதேச அமைப்பாகும். இது தற்போது 193 உறுப்பு நாடுகளைக் கொண்டுள்ளது.
    - இது நிறுவன சாசனத்தில் உள்ள நோக்கங்கள் மற்றும் கொள்கைகளால் வழிநடத்தப்படுகிறது மற்றும் அதன் பல்வேறு உறுப்புகள் மற்றும் சிறப்பு நிறுவனங்களால் செயல்படுத்தப்படுகிறது.
    - சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பைப் பேணுதல், மனித உரிமைகளைப் பாதுகாத்தல், மனிதாபிமான உதவிகளை வழங்குதல், நிலையான அபிவிருத்தியை ஊக்குவித்தல் மற்றும் சர்வதேசச் சட்டத்தை நிலைநிறுத்துதல் ஆகியவை இதன் செயல்பாடுகளில் அடங்கும்.
- வரலாறு:
    - ஐக்கிய நாடுகள் சபையின் முன்னோடி லீக் ஆஃப் நேஷன்ஸ் ஆகும், இது முதல் உலகப் போரின் சூழ்நிலையில் உருவானது மற்றும் 1919 இல் வெர்சாய்ஸ் ஒப்பந்தத்தின் கீழ் "சர்வதேச ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கும் அமைதி மற்றும் பாதுகாப்பை அடைவதற்கும்" நிறுவப்பட்டது.
- சர்வதேச அமைப்புக்கான ஐக்கிய நாடுகளின் மாநாடு (1945).
    - சான் பிரான்சிஸ்கோவில் (அமெரிக்கா) நடைபெற்ற மாநாட்டில் 50

நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு ஐக்கிய நாடுகள் சாசனத்தில் கையெழுத்திட்டனர்.

- ஐ. நா வில் இந்தியா:
    - ஐக்கிய நாடுகள் சபையின் நிறுவன உறுப்பினர் இந்தியா. நாடு ஜனவரி 1, 1942 அன்று ஐக்கிய நாடுகள் சபையின் பிரகடனத்தில் கையெழுத்திட்டது.
    - 1953 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண் விஜய லக்ஷ்மி பண்டிட் ஆவார்.
- விஜிலென்ஸ் விழிப்புணர்வு வாரம்
    - மத்திய விஜிலென்ஸ் கமிஷன் 2023 ஆம் ஆண்டு அக்டோபர் 30 ஆம் தேதி முதல் நவம்பர் 5 ஆம் தேதி வரை விஜிலென்ஸ் விழிப்புணர்வு வாரத்தை கடைப்பிடிக்கிறது:
    - 2023க்கான கருப்பொருள்: "ஊழலை வேண்டாம் என்று சொல்லுங்கள்; தேசத்திற்கு அர்ப்பணிப்போம்" ("Say no to corruption; commit to the Nation")
- மத்திய விஜிலென்ஸ் கமிஷன் (CVC) என்றால் என்ன?
    - சந்தானம் கமிட்டியின் அறிக்கையின் அடைப்படையில் அமைக்கப்பட்ட இது, இந்திய அரசாங்கத்தின் அலுவலகங்களில் ஊழலைத் தடுக்க அமைக்கப்பட்ட ஒரு உயர்மட்ட அமைப்பு ஆகும்.
- விஜிலென்ஸ் கமிஷன் (CVC) பற்றிய தகவல்கள்:
    - லோக்சபா மற்றும் ராஜ்யசபா இரண்டிலும் CVC மசோதா நிறைவேற்றப்பட்ட பிறகு, 2003 ஆம் ஆண்டு மத்திய கண்காணிப்பு சட்டம் அமலுக்கு வந்தது .
    - இந்தியாவின் முதல் தலைமை விஜிலென்ஸ் கமிஷனர் நிட்டூர் சீனிவாச ராவ்.
    - இந்தியாவின் தற்போதைய  தலைமை விஜிலென்ஸ் கமிஷனர் பிரவீன் குமார் ஸ்ரீவஸ்தவா.
- CVC மூன்று உறுப்பினர்களைக் கொண்டுள்ளது:
    - மத்திய விஜிலென்ஸ் கமிஷனர்
    - இரண்டு விஜிலென்ஸ் கமிஷனர் (அதிகபட்ச கமிஷனர்களின் எண்ணிக்கை 2)

❖ பதவிக் காலம்:

- நான்கு ஆண்டுகள் அல்லது அவர்கள் 65 வயது.
- அவர்கள் ஓய்வு பெற்ற பிறகு, அவர்கள் எந்த மத்திய அல்லது மாநில அரசு நிறுவனத்திலும் மீண்டும் பணியமர்த்தப்படுவதற்கு தகுதியற்றவர்கள்.